செய்தி வெளியீட்டு எண்.11 நாள்: 5.1.2010

**<u>தமிழ்நாடு கனிம நிறுவனம் சார்பில் தமிழக அரசுக்கு நியமனக் கட்டணம் மற்றும் ஆதாயப் பங்குத் தொகையாக 4 கோடியே 66 இலட்ச ரூபாய் !</u>**

**<u>முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் உயர்கல்வி, சுரங்கம் மற்றும் கனிமத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி வழங்கினார் !</u>**

தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான தமிழ்நாடு கனிம நிறுவனம் (டாமின்) 2008–2009ஆம் ஆண்டில் 4 கோடியே 80 இலட்ச ரூபாய் இலாபம் ஈட்டியுள்ளது. இந்நிறுவனம் அரசுக்கு 2008–2009ஆம் ஆண்டிற்கான நியமனக் கட்டணமாக 3 கோடியே 88 இலட்ச ரூபாய் மற்றும் ஆதாயப் பங்குத் தொகையாக 78 இலட்சத்து 69 ஆயிரம் ரூபாய் ஆக மொத்தம் 4 கோடியே 66 இலட்சத்து 69 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகளை தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம், உயர்கல்வி, சுரங்கம் மற்றும் கனிமத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி இன்று (5.1.2010) வழங்கினார்.

இந்நிகழ்வின்போது, நிதித்துறை முதன்மைச் செயலாளர் திரு.கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., தொழில் துறை முதன்மைச் செயலாளர் திரு. ராஜிவ் ரஞ்சன், இ.ஆ.ப., தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் டாக்டர். க. மணிவாசன், இ.ஆ.ப., பொது மேலாளர் (தொழில் நுட்பம்) திரு.வெ. மனோகரன் ஆகியோர் உடன் இருந்தனர்.

* * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.